சென்னை சேப்பாக்கம் வருவாய் நிர்வாகம் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை கூட்ட அரங்கில் கைத்தறி, கைத்திறன், துணிநூல் துறை அமைச்சர் மற்றும் பூமிதான வாரியத் தலைவருமான ஆர்.காந்தி தலைமையில் 30.09.2024 அன்று பூமிதான வாரியக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் அலுவல் சார்ந்த உறுப்பினர்களான நிலச் சீர்திருத்த ஆணையர் த.ந.ஹரிஹரன், நிலச் சீர்திருத்த இயக்குநர் அ.சங்கர், வேளாண்மைத் துறை துணை இயக்குநர் திருமதி ஜி.ஸ்ரீவித்யா, தோட்டக்கலை துறை உதவி இயக்குநர் திருமதி வி.சரஸ்வதி, வருவாய்த் துறை பிரிவு அலுவலர் சண்முகம் மற்றும் அலுவல் சாரா உறுப்பினர்கள் கே.ஆர். கண்ணன், அ.உறுமத்தான் ஆகியோர் கலந்து கொண்டனர்.

திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்ட தி.மு.க. பொறியாளர் அணி

மாநகர, ஒன்றிய, நகர, பேரூர் கழக பொறுப்புகளுக்கு விண்ணப்பிக்கலாம்!

மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எ.வ.வேலு அறிக்கை!

திருவண்ணாமலை, அக். 2-

திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்ட திமுக பொறியாளர் அணி மாநகர, ஒன்றிய, நகர, பேரூர் கழக அமைப்பாளர், துணை அமைப்பாளர் பொறுப்புகளுக்கு விண்ணப்பிக்கலாம் என்று பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து கழக உயர் நிலை செயல்திட்டக்குழு உறுப்பினரும், பொதுப்பணித்துறை அமைச்சருமான எ.வ.வேலு அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில்

தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் அண்ணன் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கினங்க திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்ட திமுக பொறியாளர் அணிக்கு மாநகர, ஒன்றிய, நகர, பேரூர் கழக அமைப்பாளர், துணை அமைப்பாளகளின் பொறுப்புக்கு விண்ணப்பங்கள் வரவேற்க்கப்படுகின்றன.

விருப்பமுள்ள கழக தொழர்கள் கீழ் கண்ட வழிமுறைகளின்படி விண்ணப்பிக்க வேண்டும்.

1. விண்ணப்பிப்பவர்கள் பொறியில் பட்டபடிப்பு / பட்டைய படிப்பு நிறைவு செய்தவராக இருக்க வேண்டும்.

2. விண்ணப்பிப்பவர்கள் அந்தந்த பகுதியில் வாக்காளராக இருத்தல் அவசியம்.

3. ஒரு அமைப்பாளர், ஐந்து துணை அமைப்பாளர்கள் எனும் அளவுக்கு மிகாமல் பொறுப்புகள் நியமிக்க பட உள்ளது.

4. பெண் பொறியியல் பட்டதாரிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

5. விண்ணப்பத்தில் இணைக்கப்பட்டுள்ள QR CODE வழியே பொறியாளர் அணியின் போர்ட்டல் வழியே மட்டும் விண்ணப்பிக்க வேண்டும்.

6. விண்ணப்பித்த விண்ணப்பதாரர்களை நேரில் அழைத்து நேர்முக தேர்வு நடத்தப்படும்.

எனவே திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்ட திமுக மாநகர, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள் மற்றும் பொறியாளர் அணி நிர்வாகிகள் மேற்கண்ட விதி முறைகளின் படி விண்ணப்பங்களை இணைப்பதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

விழுப்புரம் தெற்கு மாவட்டத்தில்

கழகக் கொடியேற்றி நல உதவிகள் - அமைச்சர் க.பொன்முடி வழங்குகிறார்!

மாவட்டப் பொறுப்பாளர் பொன்.கவுதமசிகாமணி அறிவிப்பு!

விழுப்புரம், அக். 2-

கழக துணைப் பொதுச் செயலாளர் வனத்துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி கீழ்க்கண்டவாறு கழகக் கொடியேற்றி நலத்திட்ட உதவிகளை வழங்குகிறார் என விழுப்

புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன். கவுதம சிகாமணி அறிவித்துள்ளார்.

அவர அறிவிப்பு வருமாறு:-

பவள விழா கொடியேற்றும் நிகழ்ச்சிகள்

2.10.2024 புதன்கிழமை

கோலியனூர் (மேற்கு) ஒன்றியம்

மாலை 4.00 மணி எடப்பாளையம்,

மாலை 4.30 - கண்டம் பாக்கம், கோலியனூர் (தெற்கு) ஒன்றியம்

மாலை 4.45 வி.அரியலூர்,

மாலை 5.00 மணி - பில்லூர், கோலியனூர் (கிழக்கு) ஒன்றியம்

மாலை 5.30 மணி - தாதம்பாளையம்,

மாலை 5.45 மணி வளவனூர் பேரூர்,

மாலை 6.15 மணி - இளங்காடு.

இவ்வாறு விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி அறிவித்துள்ளார்.

திமுக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் துணை முதலமைச்சராக பொறுப்பேற்றதை யொட்டி திருவள்ளூர் நகராட்சி அலுவலகத்தில் உள்ள முத்தமிழறிஞர் கலைஞர், பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச்சிலைக்கு திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.இராஜேந்திரன் மாலை அணிவித்து பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கி கொண்டாடினார். உடன் திருவள்ளூர் நகராட்சி மன்ற தலைவர் உதயமலர் பாண்டியன், நகரச் செயலாளர் சி.சு.ரவிச்சந்திரன், உள்பட நகரக் கழக நிர்வாகிகள் நகர்மன்ற உறுப்பினர்கள் வட்டக் கழகச் செயலாளர்கள் கழக மூத்த முன்னோடிகள் பலர் கலந்து கொண்டனர்.

தாம்பரத்தில் அடுக்கு மாடி சங்கத்தினர்கள் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் நிலையம் அரசு பள்ளிக்கு தேவை உபகரணங்கள் மற்றும் மாற்றுதிறனாளிகளுக்கும் ஆதரவற்றவர்களுக்கும் நலத்திட்ட உதவிகள் வழங்கி இலவச மருத்துவ முகாமை தாம்பரம் மண்டல குழு தலைவர் பகுதி கழக செயலாளர் டி.காமராஜ் துவக்கி வைத்தார். முல்லை நகர் பகுதியில் தனியார் சங்கம் லயன்ஸ் கிளப் சார்பில் ஒரு நாள் தொடர் சேவை திட்டம் பொது மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது,இதில் சிறப்பு அழைப்பாளராக சங்க மாவட்ட ஆளுநர் ரவிச்சந்திரன், ஆகியோரும் கலந்து சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் நிலையம், அரசு பள்ளிகளுக்கு தேவைப்படும் கணினி பெட்டகம் குழந்தைகள் விளையாட்டு உபகரணங்கள் , இரு சக்கர வாகன ஓட்டுகளுக்கு தலைகவசம், பள்ளி மாணவ மாணவிகளுக்கு நோட்டு புத்தகம் உள்ளிட்ட உபகரணங்கள் வழங்கப்பட்டது,மேலும் ஆதரவற்றவர்களுக்கு அரிசி உள்ளிட்ட உணவுப் பொருட்களும் சிறு வியாபாரிகளுக்கு நிழல் குடை உள்ளிட்டவைகளும் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் மாமன்ற உறுப்பினர் எல்.பெரியநாயகம், சங்கத் தலைவர் கிறிஸ்டி தேவகுமாரி, சாசன தலைவர் தியாகராஜன் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

சென்னை சுற்றுலா வளாக கூட்டரங்கில், நேற்று (1.10.2024) சுற்றுலாத்துறை மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர்.பி.சந்தரமோகன், சுற்றுலா ஆணையர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் சி.சமயமூர்த்தி. சுற்றுலாத்துறை மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

திருவள்ளூர் மாவட்டம் "தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பை - 2024"

விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற வீரர்களுக்கு பரிசு - சான்றிதழ்!

அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் வழங்கினார்!

திருவள்ளூர், அக்.02-

திருவள்ளூர் மாவட்டம் பட்டரைபெரும்புதூர் டாக்டர் அம்பேத்கர் அரசு சட்ட கல்லூரி கூட்ட ரங்கில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், மாவட்ட அளவிலான "தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பை" - 2024 விளையாட்டுப் போட்டி வெற்றி பெற்ற வீரர் மற்றும் வீரங்கனைகளுக்கு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் பரிசு மற்றும் சான்றிதழ்களை வழங்கினார்.

அப்போது அவர் தெரிவிக்கையில் :-

"தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பை - 2024" விளையாட்டுப் போட்டிகள் கடந்த 10.09.2024 அன்று மாவட்ட விளையாட்டு அரங்கம் திருவள்ளூரில் தொடங்கப்பட்டது

அதனை தொடர்ந்து கடந்த 10.09.2024 முதல் 24.09.2024 வரை நடைப்பெற்ற விளையாட்டுப் போட்டிகள் மாவட்ட விளையாட்டு அரங்கம், AK Sports Club, தமிழ்நாடு சிறப்பு காவல் படை மைதானம், ICF பள்ளி வில்லிவாக்கம், நாசரேத் கல்லூரி, ஆவடி ஆகிய இடங்களில் பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் நடைப்பெற்றது.

திருவள்ளூர் மாவட்ட அளவிலான போட்டிகளில் பள்ளி, கல்லூரி, மாற்றுத்திறனாளிகள், பொதுப் பிரிவு மற்றும் அரசு பணியாளர்கள் என 5 பிரிவுகளில் ஆண் / பெண் இருபாலரும் பங்கு பெற்றதில் , 10949, மாணவர்கள் / ஆண்களும், 3196 மாணவிகள் / பெண்களும், மொத்தம் - 14783 - வீரர், வீராங்கனைகள் கலந்து கொண்டனர். இப்போட்டிகளில் முதல் மூன்று இடங்களில் 2412 வீரர்/ வீராங்கனைகள் வெற்றிப் பெற்று நமது மாவட்டத்தில் சாதனை படைத்துள்ளார்கள்.

மேலும் மண்டல அளவிலான விளையாட்டு போட்டிகளானது பள்ளி மற்றும் கல்லூரி பிரிவுகளில் , கடற்கரை கையுந்துப்பந்து (Beach Volleyball), குத்துச்ண்டை (Boxing), பளு தூக்குதல் (Weightlifting), வாள்விளையாட்டு (Fencing), ஜூடோ (Judo), டென்னிஸ் (Tennis) ஆகிய விளையாட்டுகளில் 752 மாணவர்களும், 292 மாணவிகளும், மொத்தம் - 1044 வீரர், வீராங்கனைகள் கலந்து கொண்டனர்.

மாநில அளவிலான விளையாட்டு போட்டிகளுக்கு - மாவட்ட அளவிலான போட்டிகளில் வெற்றி பெற்ற வீரர், வீராங்கனைகளில் - தனிநபர் போட்டிகளில் முதல் இடத்தை பெற்றவர்களும், குழு போட்டிகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட அணியின் வீரர் வீராங்கனைகளும், மண்டல அளவிலான விளையாட்டு போட்டியில் முதல் நான்கு இடத்தை வெற்றி பெற்ற வீரர் வீராங்கனைகளும் கலந்து கொள்ள தகுதி பெறுவார்கள், மேலும் இதற்கான மாநில போட்டிகள் சென்னை, செங்கல்பட்டு, மதுரை, திருச்சி, கோயம்பத்தூர் ஆகிய மாவட்டகளில் வரும் 04.10.2024 அன்று தொடங்கி 24.10.2024 வரை நடைபெ உள்ளது.

மாவட்ட, மண்டல அளவிலான தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பை - 2024 விளையாட்டு போட்டியில் வெற்றி பெற்ற வீரர் வீராங்கனைகளுக்கு முதல் பரிசாக தலா ரூ.3000/- மும் இரண்டாம் பரிசாக தலா ரூ.2000/- மும் மூன்றாம் பரிசாக தலா ரூ.1000/- மும் சான்றிதழ் மற்றும் பதக்கமும் இன்றைய தினம் வழங்கப்பட்டது. மேலும், அகில இந்திய அளவில் விளையாட்டு போட்டி சிறந்து விளங்க தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சிறப்பான திட்டங்களை செயல்படுத்தி விளையாட்டு துறையின் மேம்படுத்தி வருகிறார். மேலும் விளையாட்டு துறையினை சிறப்புடன் மாண்புமிகு இளைஞர் அமைச்சர் அவர்களும் விளையாட்டுத்துறை முக்கியத்துவம் கொடுத்து விளையாட்டு வீரர் மட்டும் வீராங்கனைகளை ஊக்குவித்து வருகிறார்கள். குறிப்பாக சொல்ல வேண்டுமானால் நான்கே மாதத்தில் மாமல்லபுரத்தில் செஸ் ஒலிம்பியாட்டினை நடத்திய தமிழகத்திற்க்கு பெருமை சேர்த்தவர். இப்படி பல்வேறு வகையில் விளையாட்டுத்துறையை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுதுறை அமைச்சர் அவர்கள் விளையாட்டுத் துறையில் சர்வதேச அளவிற்கு கொண்டு சென்று உள்ளார். நம் மாநிலத்தைச் சேர்ந்த சேலத்தைச் சேர்ந்த மாற்றுத்திறனாளி மாரியப்பன் அவர்கள் தங்கம் வென்று நம் மாநிலத்திற்க்கு பெருமை சேர்த்தது போல நீங்களும் விளையாட்டுப் போட்டிகளில் தன்னம்பிக்கையுடன் செயல்பட்டு பரிசுகள் வெல்ல வேண்டும். எந்த ஒரு போட்டியினாலும் வெல்ல வேண்டும் என்ற வேட்கை மற்றும் பொறாமையுடன் செயல்பட வேண்டும் அப்பொழுது தான் அப்போட்டிகளில் வெற்றியடைய முடியும். ஆகவே வெற்றி பெற்ற வெற்றி பெற்று நம் மாவட்டத்திற்க்கு பெருமை சேர்க்க வேண்டும் என சிறுபான்மையினர் நலன் மற்றும் அயல்நாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.த.பிரபுசங்கர், திருவள்ளூர் மேற்கு மாவட்டச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ, திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன், பொன்னேரி சட்டமன்ற உறுப்பினர் துரை சந்திர சேகர், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் கே.வி.ஜி. உமாமகேஸ்வரி, ஆவடி மாநகராட்சி மேயர் உதயகுமார், மாவட்ட விளையாட்டு அலுவலர் முனைவர். வி.சேதுராஜன், திருவள்ளூர் வருவாய் கோட்டாட்சியர் கற்பகம், உதவி ஆணையர் கலால் ரங்கராஜன், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் ரவிச்சந்திரன், மாவட்ட தடகள பயிற்றுநர், திருமதி.லாவண்யா மற்றும் பயிற்றுநர்கள் கல்லூரி பேராசிரியர்கள் மாணவ மாணவியர்கள் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

சென்னை வடக்கு மாவட்டம்

பகுதி வாரியாக பொது உறுப்பினர்கள் கூட்டங்கள்!

கழக அமைப்பு செயலாளர் ஆலந்தூர் ஆர்.எஸ்.பாரதி பங்கேற்பு!

மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

தமிழ்நாடு முதலமைச்சர் கழக தலைவர்அவர்களின் அறிவுறுத்தலின்படி, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி சென்னை வடக்கு மாவட்டத்தில் பகுதி வாரியாக பொது உறுப்பினர்கள் கூட்டம் கீழ்கண்ட அட்டவணைப்படி நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர், அந்தந்த தொகுதிக்குட்பட்ட முன்னாள் இந்நாள் சட்டமன்ற உறுப்பினர்கள், தொகுதி பொறுப்பாளர்கள், மாநில மாவட்ட நிர்வாகிகள், தலைமை செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி செயலாளர்கள், அந்தந்த பகுதிக்குட்பட்ட பகுதிநிர்வாகிகள், வட்ட செயலாளர்கள் மாவட்ட பகுதி அணிகளின் நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், வட்ட கழக நிர்வாகிகள்மற்றும் செயல்வீரர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க கேட்டுக்கொள்கின்றேன்.

நாள்	பகுதி	நடைபெறும் இடம்
04-10-2024 வெள்ளிக்கிழமை	மாலை 5.00 மணி பெரம்பூர் வடக்கு	அமான் மஹால், முத்தமிழ்நகர்
	மாலை 6.00 மணி ஆர்.கே. நகர் கிழக்கு	கேப்டன் மஹால், T.H ரோடு, தண்டையார்பேட்டை
05-10-2024 சனிக்கிழமை	மாலை 5.00 மணி பெரம்பூர் தெற்கு	பெருந்தலைவர் காமராஜர் மண்டபம் , பழனியாண்டவர் கோவில் தெரு.
	மாலை 6.00 மணி இராயபுரம் மேற்கு	அறிவகம், சூரியநாராயணன் தெரு, இராயபுரம்.

கூட்டம் குறித்து சம்பந்தப்பட்ட பகுதிகழக செயலாளர்கள் முறையாக அழைப்பிதழ்களை தங்கள் பகுதியில் உள்ள அனைத்து நிர்வாகிகளுக்கும் வழங்கி கழகத்தினர் பெருமளவில் கலந்துகொள்ளகூட்டம் ஏற்பாடு செய்திட வேண்டுகிறேன்.

ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ.

பொறுப்பாளர், சென்னை வடக்கு மாவட்ட தி.மு.க.

01.10.2024 முதல் கட்டணமின்றி

பெயர் மாற்றம் - பெயர் திருத்தம் செய்து கொள்ளலாம்!

சென்னை குடிநீர் வாரியம் தகவல்!

சென்னை, அக்.2-

சென்னை குடிநீர் வாரியத்தில் 13.85 இலட்சம் பேர் குடிநீர் / கழிவுநீர் வரி செலுத்திவருகிறார்கள். இதுவரை பெயர் மாற்றம் / பெயர் திருத்தம் மேற்கொள்வதற்கு ரூ.100/- கட்டணம் வசூல் செய்யப்பட்டது. 01.10.2024 முதல் பெயர் மாற்றம் / பெயர் திருத்திற்கான கட்டணங்கள் எதுவும் செலுத்த வேண்டியதில்லை. உரிய ஆவணங்கள் இணைக்கும் பட்சத்தில் பெயர் மாற்றம் / பெயர் திருத்தம் படிவங்கள் சரிபார்க்கப்பட்டு கட்டணம் ஏதுமின்றி உரிய காலத்திற்குள் செய்து தரப்படும்.

வரிசெலுத்துவோர் மற்றும் நுகர்வோர்கள் அந்தந்த பகுதி அலுவலகங்களில் உள்ள வசூல் மையங்களில் பெயர் மாற்றம் / பெயர் திருத்தம் படிவங்கள் சமர்பித்து சரி செய்து கொள்ளலாம்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கும்முடிப்பூண்டி ஒன்றியத்தில் கும்முடிப்பூண்டி ஆண்கள் மற்றும் பெண்கள், கவரைப்பேட்டை, எளாவூர், சுண்ணாம்புகுளம், ஆரம்பாக்கம் மற்றும் புது கும்முடிப்பூண்டி அரசு மேல்நிலைப்பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியர்களுக்கு 1471 விலையில்லா மிதி வண்டிகளை மாவட்டச் செயலாளர் டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ. வழங்கி சிறப்புரையாற்றினார். பா.செ.குணசேகரன், கே.வி.ஜி.உமாமகேஸ்வரி, எஸ்.ரமேஷ், மு.மணிபாலன், இரா.அறிவழகன், அ.சகிலா அறிவழகன், எம்.கேசவன், மு.பாஸ்கரன், வேதச்சாலம், எஸ்.ராமஜெயம், எம்.ஜெயசந்திரன், டி.ஜெ.தமிழரசன், கே.ஆறுமுகம், எஸ்.உதயகுமார் அரிதாஸ், இஸ்மாயில், கருணாகரன், வெங்கடேசன், காளிதாஸ், மனோகரன், மெய்யழகன், சுகு க.பரத்குமார், ரவி, உமாபதி, பொன்சாந்தி, நந்தகுமார், பா.பரத்குமார், ஜெயராமன்,பாலு விநாயகம், அறிவழகன், கே.எஸ்.கோபி, இளவரசு, சாண்டிலியன், பாலுமகேந்திரன். ராஜேஷ்வரி, ரவிந்திரன், ஜெயா, பிரகாஷ், அஜித், ஜெயகோபி, ராஜ்குமர், மணி தசரதன் உள்ளிட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர்.